# யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்

## வல்வெட்டித்துறை

# திறுவுநர் தினமும்
# பரிசளிப்பு விழாவும் – 2017

**காலம் : 2017.07.15 சனிக்கிழமை**

**நேரம் : மு.ப 9.00 மணி**

**இடம் : பாடசாலைப் பிரதானமண்டபம்**

## தலைவர்

**செல்வி.இ.சுப்பிரமணியக் குருக்கள்**

(அதிபர்)

## பிரதம விருந்தினர்

**உயர்திரு.செல்லத்துரை உதயகுமார்**

(மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)

## பரிசில் வழங்குநர்

**திருமதி.நந்தினி உதயகுமார்**

(பாடசாலைப் பற்சிகிச்சை நிபுணர் – யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

– பாடசாலைச் சமூகம் –

# பாடசாலைக்கீதம்

இராகம்:- ஹம்சத்வனி இயற்றியவர் : எஸ்.முத்துக்குமாரசுவாமி

பொன்னான எங்கள் மகளிர் மகா வித்யாலயம்

பொலிந்து சிறந்து வளர்ந்து வாழ்கவே

பொன்னான எங்கள் வல்வை மகளிர் மகா வித்யாலயம்

பொலிந்து சிறந்து வளர்ந்து வாழ்கவே

- பொன்னான -

விஞ்ஞான கலைகள்பல் விதரணையில் ஊறி

எந்நாளும் முன்னோக்கி இதமுடனே தேறி

தன்மானம் தாங்கிய தாழ்வையும் சீறி

தரத்தை நிலை நிறுத்தி உரத்தைக் கொடுக்கும் எங்கள்

- பொன்னான -

இங்கிதப் பண்புகள் பேசவைத்து

எதிரியையும் இணைக்கும் வழி வகுத்து

சங்கீத நாட்டிய கலை வளர்த்து

சமயத்தை முதற் கொண்டு சரீரத்தையும் வளர்க்கும் எங்கள்

- பொன்னான -

மனையறம் யாதென தெளிய வைத்து

மாந்தரின் வாழ்வுதனை மகிழ வைத்து

அனுதினம் பொருட்பேணி அறம் வளர்த்து

ஆக்கத்தைப் பெருக்குகின்ற ஊக்கத்தைக் கொடுக்கும் எங்கள்

- பொன்னான -

# மகுடவாசகம்

**"கற்க தக நிற்க"**

## தூரநோக்கு

சமகால உலகின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நவீன தொழில் நுட்ப திசைமுகப்படுத்தலில் கற்றல் சூழலைத் தூண்டி ஒவ்வொரு தனியாளினதும் சுய சிந்தனையை உச்ச அளவினதாக்கி கல்வி மற்றும் வாழ்க்கையில் எதிர் நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியதாக மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் சமூகம்.

## பணிக்கூற்று

- ஒவ்வொரு தனியாளினது ஆன்மீகத்தையும் நல்லொழுக்கத்தையும் ஊக்குவித்தல்.
- மனித விழுமியங்களையும் நேர மனப்பாங்குகளையும் வளர்த்தல்.
- நவீன கற்றல் சாதனங்களை வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்தி, ஒவ்வொரு - வரினதும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு சூழலை உருவாக்குதல்.
- சகல மட்டங்களிலும் நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடித்தல்.
- நவீன தொடர்பாடல் சாதனங்களினூடாக அத்தியாவசியமான தகவல்களை வழங்குதல்.
- ஒவ்வொருவரினதும் தனித்துவத்தையும் தன்னம்பிக்கையையும் ஊக்குவித்தல்.
- தர்க்கரீதியான ஆக்கத்திறன் சிந்தனையை மேம்படுத்துதல்.
- மிகை நிரப்புக் கற்றல் செயற்பாடுகளைப் பாடசாலை மட்டத்தில் ஊக்குவித்தல்.
- ஒவ்வொரு மாணவரும் வருடம் முழுவதும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் பங்குபற்றக் கூடிய வகையில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை வழங்குதல்.
- உற்று நோக்கிய சிந்தனை, கண்டாய்தல் மற்றும் புத்தாக்க முயற்சிகளினூடாக அறிவைப் பெற்றுக் கொள்ளுதல்.

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர் வரவேற்பு
- மங்கல விளக்கேற்றல்
- நிறுவுநர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தல்
- நிறுவுநர் உருவப்படத்திற்கு விளக்கேற்றல்
- இறைவணக்கம்
  1. தேவாரம்
  2. கிறிஸ்தவ கீதம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
  (திருமதி. க. செல்வசுந்தரம்)
- அதிபர் அறிக்கை
  (செல்வி. இ. சுப்பிரமணியக்குருக்கள்)
- பிரதம விருந்தினர் உரை
  திரு. செல்லத்துரை உதயகுமார்
- பரிசில் வழங்கல்
  திருமதி. நந்தினி உதயகுமார்
- நன்றி உரை
  (திரு. அ. ஜெயநிமலன்)
- கலை நிகழ்ச்சிகள்

# அதிபர் ஆண்டறிக்கை 2016/2017

வடமராட்சிப் பிரதேசத்தில் புகழ்பூத்த வல்வெட்டித்துறைப் பதியினிலே தனக்கென்று ஓர் இடத்தினை நிலை நிறுத்தி தலைநிமிர்ந்து நிற்கும் பாடசாலைகளில் யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயமும் ஒன்றெனில் அது மிகையாகாது. நிரூபணமானதும் நிச்சயமானதுமான பல சாதனைகள் படைத்து வெற்றிப் பதிவுகள் பலவற்றைக் கொண்டதோடு சைவ விழுமியமும், பண்பாடும் கொண்டிலங்கும் மாணவ சமூகத்தையும் ஆசிரியர் குழாத்தினையும் தன்னகத்தே கொண்டு பெருமையுடன் காட்சிதரும் எமது வித்தியாலயம் ஆடித்திங்களில் சனிக்கிழமையாம் இந்நன்னாளில் எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானின் கடாட்சத்துடன் இப் பரிசில் நாள் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகின்றது.

இன்று எமது பரிசளிப்பு நாளில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரிய மாகாணக்கல்விப்பணிப்பாளர் உயர்திரு.செல்லத்துரை உதயகுமார் அவர்களே, அவர்தம் பாரியார் திருமதி.நந்தினி உதயகுமார் அவர்களே, வடமராட்சியின் கல்வி உயர்விற்காக அரும்பாடுபட்டுச் செயற்படும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களே, வலயக்கல்வி உத்தியோகத்தர்களே, எமது அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்கும் அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே,எமது பாடசாலை ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே, எல்லோருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பாடசாலையின் 2017 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு நாளின் அறிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய எமது நிறுவுநர் தினவிழாவிற்கும் பரிசில் வழங்கும் வைபவத்திற்கும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மேன்மைக்கும் பெருமதிப்பிற்குமுரிய வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருவாளர் செல்லத்துரை உதயகுமார் அவர்களையும் அவர் தம் பாரியார் திருமதி நந்தினி உதயகுமார் அவர்களையும் அறிமுகம் செய்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய எமது நிறுவுநர் தினவிழாவும் பரிசில் வழங்கும் வைபவத்திற்கும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மேன்மைக்கும் பெருமதிப்பிற்குமுரிய வடக்குமாகாண கல்விப்பணிப்பாளர் அவர்கள் கால்கோள் நிலைக் காலத்திற்கான ஆரம்பக் கல்வியினை வடமராட்சியின் யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையிலும் இடைநிலைக்கல்வியினை யா/ஹாட்லிக்கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ் பல்கலைக்கழகத்திலும் கற்று முடித்து விஞ்ஞானப் பட்டதாரியானார்.

பின்னர் ஆசிரியராக $4^1/_2$ வருடங்கள் சிலா/நல்ரியா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார். பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்விமுகாமைத்துவம், கல்விமுதுமானி போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளார். விடாமுயற்சி, மதிநுட்பம், பன்முக ஆளுமை,

பூரண நம்பிக்கை, துணிச்சல் மிக்க இவரது உச்சமான திறமைகளின் வெகுமதியாக இலங்கை கல்வி நிர்வாக தேர்வில் (S.L.E.A.S) 01.06.1993ல் சித்தியடைந்து உதவிக் கல்விப்பணிப்பாளராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக, வலயக்கல்விப் பணிப்பாளராக இன்று வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளராக மக்கள் சேவையினை மனம் கொண்டு சேவையாற்றி வருகின்றார். இவர் அமைதியான சுபாவமும் ஆன்மீகமும் மனிதநேயமும் கொண்ட உயர்ந்த பண்பாளனும் ஆவார்.

இன்று பரிசில்களை வழங்க வந்திருக்கும் பிரமத விருந்தினரின் பாரியார் திருமதி.நந்தினி உதயகுமார் அவர்கள் 1973 – 1977 வரை ஆரம்பக் கல்வியை யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியினை 1978 – 1985 வரை யா/நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று முடித்தார். பின்னர் மகரகமவில் உள்ள Dental Therapist பாடசாலையில் கற்று Diploma in Dental Therapy என்ற பட்டத்தினை பெற்றார். அதன் பொருட்டு முதலாவது நியமனத்தை 1991ல் சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் பெற்று இன்று யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் பாடசாலைப் பற்சிகிச்சை நிபுணராகச்சேவையாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி பிரதேசத்தில் எமது பாடசாலை சைவப்பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் கட்டிக் காத்து கல்வித் துறையிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பெருமுன்னேற்றம் கண்டு வருகின்றது. இதற்கு உறுதுணையாக இருந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஆசிரியர்கள், அனுசரணை வழங்கும் வலயக்கல்வி அதிகாரிகள், ஆதரித்து உதவிகள் நல்கும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு அங்கத்தவர்கள், நிர்வாகத்தினர் அனைவருக்கும் இவ்விழா நன்னாளிலே எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய உலகின் சவால்களை எதிர் கொள்ளத்தக்கதான சிந்தனைத்திறனும், செயற்றிறனும், ஆளுமையும் கொண்ட மாணவர்களை உருவாக்கும் வகையில் எமது பாடசாலைக்கல்வி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் எமது பாடசாலை மாணவர்களின் சாதனைகள் படிப்படியாக மேல் நோக்கி செல்வது பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

கடந்த காலங்களில் எமது பாடசாலையிலிருந்து கல்வி கற்று வெளியேறிய பலர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உயர்பதவிகளில் மிளிர்வது சாதனைகளின் ஆதாரங்களாகின்றது.

## எமது பாடசாலையின் மாணவர் விபரம் – 2017

| | |
|---|---|
| தரம் 1-5 ஆரம்பப்பிரிவு | 146 |
| தரம் 6-11 இடைநிலைப்பிரிவு | 169 |
| தரம் 12-13 சிரேஷ்டபிரிவு | 64 |
| மொத்தம் | 379 |

## எமது பாடசாலையின் ஆசிரிய ஆளணி விபரம் – 2017

| | |
|---|---|
| முதுகல்வியியல்மாணி | 02 |
| நுண்கலைமாணி | 04 |
| தொழில்நிர்வாகமாணி | 01 |
| வணிகமாணி | 03 |
| கலைமாணி | 07 |
| கல்வியியல்மாணி | 04 |
| பயிற்றப்பட்டோர் | 08 |
| மொத்தம் | 29 |

## புதிதாக இப்பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர்கள்

திரு.கணேசமூர்த்தி உதயசீலன்(உதவி அதிபர்)

திருமதி.கலாராணி யோகேஸ்வரன்

திருமதி.மேனகா கலைச்செல்வன் (இணைப்பு)

## பாடசாலையில் இருந்து பதவி உயர்வு பெற்றுச் சென்றோர்

திரு.கிட்டிணன் சிறிகாந்தராசா

செல்வி.கிருஸ்ணபிள்ளை ஜானகி

கடந்த வருடத்தில் மேற்படி ஆசிரியர்கள் இப் பாடசாலையில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி உயர் பதவி பெற்றுச் சென்றுள்ளனர்.

## எமது பாடசாலையின் கல்விசாரா ஆளணி விபரம் – 2017

| | |
|---|---|
| அலுவலக உதவியாளர் | 01 |
| நூலக உதவியாளர் | 01 |
| சுகாதார மேம்பாட்டுத் தொழிலாளி | 01 |
| பாடசாலைக் காவலாளி | 01 |

எமது பாடசாலையில் சென்ற வருடம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை தொடர்ச்சியாக தக்க வைப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வன் வைத்தீஸ்வரன் யோகன் 154 உயர் புள்ளிகள் பெற்று சாதனை படைத்துள்ளார். 23 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கும் மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். 06 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கும் மேல் பெற்று சித்திவீதம் 91 சதவீதத்திற்கு உயர்ந்துள்ளதையும் இவ்வேளையில் குறிப்பிடுவதில் பெருமகிழ்வுறுகின்றேன்.

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| 2015 | 34 | 09 | 26.5% |
| 2016 | 33 | 01 | 03.03% |

க.பொ.த. சாதாரண தரத்தைப் பொறுத்த வரையில் 2015ஆம் ஆண்டு 81.48% ஆகவும் 2016 இல் 80% ஆகவும் இருந்தது. இனிவரும் ஆண்டில் 2016 ஆம் ஆண்டிற்குரிய சித்திவீதத்தை தக்கவைத்துக் கொள்வோம்.

### க.பொ.த. சாதாரண தரம் – 2016

| பாடங்கள் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| சமயம் | 14 | 14 | 100% |
| கத்தோலிக்கம் | 06 | 06 | 100% |
| தமிழ் | 20 | 19 | 95% |
| ஆங்கிலம் | 20 | 11 | 55% |
| விஞ்ஞானம் | 20 | 16 | 80% |
| கணிதம் | 20 | 17 | 85% |
| வரலாறு | 20 | 20 | 100% |
| புவியியல் | 10 | 09 | 90% |
| வர்த்தகம் | 10 | 10 | 100% |
| சங்கீதம் | 05 | 05 | 100% |
| நடனம் | 11 | 11 | 100% |
| தமிழ் இலக்கியநயம் | 04 | 03 | 75% |
| தகவல் தொ.நுட்பம் | 09 | 09 | 100% |
| கடல்வளம் | 05 | 05 | 100% |
| மனைப்பொருளியல் | 02 | 01 | 50% |
| சுகாதாரம் | 04 | 04 | 100% |

செல்வி.ஜெயகணேஸ் தமிழ்ப்பிரியா 8A, B
செல்வி.ஸ்ரீயுவராஜன் ஹம்சா 8A, B
பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்குப் புகழ் சேர்த்துள்ளனர்.

## க.பொ.த.உயர்தரம்

| 2015 | | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| பாடங்கள் | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | சித்திச்தம் | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | சித்திவீதம் |
| பொருளியல் | 04 | 04 | 100% | 06 | 06 | 100% |
| வர்த்தகம் | 04 | 04 | 100% | 06 | 06 | 100% |
| கணக்கியல் | 04 | 04 | 100% | 06 | 06 | 100% |
| பொது ஆங்கிலம் | 04 | 02 | 50% | 06 | 03 | 50% |
| பொது அறிவு | 04 | 04 | 100% | 06 | 06 | 100% |
| தமிழ் | 06 | 05 | 83% | 13 | 12 | 92.3% |
| பொருளியல் | 04 | 04 | 100% | 02 | 02 | 100% |
| நடனம் | 03 | 03 | 100% | 05 | 05 | 100% |
| சங்கீதம் | 01 | 01 | 100% | 02 | 02 | 100% |
| கிறிஸ்தவநாகரிகம் | - | - | - | 01 | 01 | 100% |
| புவியியல் | 01 | 01 | 100% | 06 | 05 | 83.3% |
| அளவையியல் | - | - | - | 03 | 02 | 66.6% |
| மனைப்பொருளியல் | 02 | 02 | 100% | 01 | 01 | 100% |
| பொது அறிவு | 06 | 06 | 100% | 13 | 11 | 84.6% |

2016இல் உயர்தரப்பிரிவை சேர்ந்த மாணவிகள் செல்வி.இ.லக்சுமி முகாமைத்துவ பீடத்திற்கும், செல்வி.வி.ஜனுஜா, செல்வி.கி.மேரியஸ்ரலா கலைப்பீடத்திற்கும் தெரிவாகி உள்ளமை பாராட்டுதற்குரியது.

எமது பாடசாலை 50வது ஆண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் தரம் 1லும் தரம் 6லும் மாணவர் தொகை அதிகரித்துள்ளது. தேசிய பரீட்சைகளில் அடைவு மட்டமும் அதிகரித்து வருகின்றது. விளைதிறனுள்ள பாடசாலை என்பதற்கு எடுத்துக்காட்டாக 2016ம் ஆண்டு 07மாணவர்களை கணித விஞ்ஞானப்பிரிவில் கற்பதற்கு வெளியேற்றியுள்ளோம். இது நமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. இப்பாடசாலை இரண்டு தசாப்த காலத்திற்கு முன்பு எவ்வாறு இருந்ததோ அவ்வாறு இருக்க வேண்டும் என்பது தான் பாடசாலை சமூகத்தினரது விருப்பம். எமது பாடசாலையில் இப்பொழுது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை நிலவுவதால் பெருமதிப்புக்குரிய மாகாணக்கல்விப் பணிப்பாளர் அவர்கட்கு தாழ்மையாக வேண்டுகோளை முன்வைக்கிறேன். தரம் 1, தரம் 6 வகுப்புக்களுக்கு சமாந்தர வகுப்புக்களை உருவாக்குவதற்கான அனுமதியினை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் எமது பாடசாலையின் ஐந்தாண்டுத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆரம்பக்கல்வி வகுப்பறை, தங்கரத்தினம் மண்டபம் ஆகிய இரண்டு கட்டடங்களிலும் மேல்மாடி அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். இதற்கு கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் வருகின்ற சந்தர்ப்பங்களில் எமது பாடசாலையின் தேவையையும்

கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தேவை நிறைவேறும் பட்சத்தில் கணிதவள நிலையம், செயற்பாட்டறை, ஆங்கில நூலகம், மகிழ்வகம் போன்ற தேவைகள் நிறைவு செய்யப்படும் என்பதனையும் தங்கள் கவனத்தில் கொண்டு வருகின்றேன்.

இணைப்பாடவிதான செயற்பாட்டினை பொறுத்தவரை 2016ம் ஆண்டு அகில இலங்கை மேசைப்பந்தாட்டப் போட்டியில் 21 வயதுப்பிரிவில் ரவிக்குமார் பிருதா அரையிறுதிச்சுற்று வரை முன்னேறி தகுதிச் சான்றிதழ் பெற்றுள்ளார். 18 வயதுப்பிரிவில் அருள்தேவதாஸ் மேரிஆன்திரேசா காலிறுதிச்சுற்றுவரை முன்னேறி தகுதிச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

2016ம் ஆண்டு NSBS செயற்றிட்டத்தின் கீழ் எமது பாடசாலைக்கு மலசல கூடத்திற்கென 0.6960மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இந்நிதியினைப் பயன்படுத்தி ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான மலசல கூடத்தினைக் கட்டி முடித்து செயற்றிட்டத்தினை பூர்த்தி செய்துள்ளோம். NSBS வகை 2 செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இரண்டு மில்லியன் ரூபா நிதியில் 13 இலட்சத்தினைப் பயன்படுத்தி ஆரம்பக்கல்வி வகுப்பிற்கான மேற்கூரைத்திருத்தம், தங்கரத்தினம் மண்டபம் முழுமையான திருத்தம், க.பொ.த உயர்தர வகுப்பு மேற்கூரைத்திருத்த வேலைகள் என்பன நிறைவேற்றப்பட்டுள்ளன. பிரதான மண்டப திருத்த வேலைக்காக வழங்கிய 0.83 மில்லியன் ரூபா நிதியினைப் பயன்படுத்தி பிரதான மண்டபம் முழுமையாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

எமது பாடசாலை மாணவிகள் கல்வி ஒழுக்கத்தோடு சிந்தனையாற்றல், செயற்றிறன், ஆளுமை உடையவர்களாக எதிர்காலத்தில் திகழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை மன்றங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன. எமது பாடசாலையின் முதன்மை மாணவத்தலைவர்கள் வரிசையிலே கடந்த மூன்று ஆண்டுகளாக யோகராஜன் தனுஜா, ஆனந்தராசா தமிழினி, இராசகுமார் லக்சுமி ஆகியோர் மூன்று பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்று முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. தொடர்ந்தும் இந்நிலைமையை முதன்மை மாணவிகள் தக்க வைப்பார்கள் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

இன்றைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு கற்றல் வள நிலையமாக உருமாறியிருக்கும் நூலகங்களின் பங்கு அளப்பரியது. அந்த வகையில் எமது பாடசாலை நூலகமும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அளப்பரிய பணியாற்றி வருகின்றது. தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளுக்காக எமது பாடசாலை நூலக சேவையினைப் பாராட்டி தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் வெற்றி கரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு பாடசாலை முகாமைத்துவக் குழுவினரும், சகல ஆசிரியர்களும் பெரும் பங்காற்றி வருவதுடன், பாடசாலையின் அபிவிருத்திக் குழுவினரும் பாடசாலையின் செயற்பாடுகளில் அதிக அக்கறையுடன் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவற்றினூடாகக் கால்கோள் விழா, ஆடிப்பிறப்பு, வாணிவிழா, ஒளிவிழா, வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி, ஆங்கில மொழித்தினம், தமிழ்மொழித்தினம், காலை உடற்பயிற்சி, நற்சிந்தனை, வெள்ளி ஆராதனை, பிரிவுபசார வைபவங்கள் என்பன சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும், நிலைபேற்றிற்கும் பல வழிகளில் உழைத்த பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, வலயக்கல்வி அலுவலகம், நீண்ட குறிக்கோள்களைக் கொண்டு செயற்படும் எமது ஆசிரியர் குழாத்தினர், கல்விசாரா நிறுவனங்கள், கேட்டபோதெல்லாம் உடன் வந்து உதவிகளை வழங்கும் நெடியகாடு இளைஞர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் தொண்டராசிரியர்களுக்கு ஊக்குவிப்புப் பணத்தினை வழங்கிக் கொண்டிருக்கும் வல்வை நலன்புரிச்சங்கம் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை கூறிக் கொள்வதோடு மேலும் எமது பாடசாலை பௌதீக வளத்தாலும், கல்வி வளத்தாலும் சிறப்புப் பெற்றுப் பண்புடைய மாணவர்களை உருவாக்கி உலகுக்கு வழங்க, எல்லாம் வல்ல இறையருளைப்பிரார்த்தித்து எனது அதிபர் உரையை நிறைவு செய்கின்றேன்.

## 2017இல் அன்பளிப்புச் செய்தோர்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.இ.ஞானகுரு | செயற்றிட்டம் | 25000.00 |
| 2. | C.W.N. Maths | | 50000.00 |
| 3. | திருமதி.சி.யோகேந்திரதாஸ் | நூலகமேசைவிரிப்பு | 5000.00 |
| 4. | திருமதி.சு.சுரேஸ்குமார் | | 2000.00 |
| 5. | திருமதி.மை.பால்ராஜ் | | 2000.00 |
| 6. | திருமதி.த.செல்வகுரு | | 9000.00 |
| 7. | திருமதி.க.கோணநாயகம் | 60பை குளுக்கோஸ் | |
| 8. | திருமதி.சி.யோகேந்திரதாஸ் | 13 கப் | 4500.00 |
| 9. | திருமதி.ஜ.உதயதாசன் | | |
| | | கணினிகொள்வனவு | 50000.00 |
| 10. | வல்வை நலன்புரிச்சங்கம் | 8கணினி | 780000.00 |
| 11. | திருமதி.க.கோணநாயகம் | குப்பை அள்ளும் பொருள் | 3000.00 |
| 12. | செல்வி.உ.சசிதரா | அன்பளிப்பு | 4000.00 |
| 13. | திருமதி.சைராபானு | அன்பளிப்பு | 24000.00 |
| 14. | திருமதி.சா.சுலோசனாதேவி | ஞாபகார்த்தமாக மகன் | |
| | சா.பாலசேகர் | பல்கலைக்குத் தெரிவானோர்க்கான | |
| | | 3பதக்கம், | 15000.00 |
| 15. | வல்வை நலன்புரிச்சங்கம் | சைக்கிள் பார்க் | 300000.00 |
| 16. | சிவன் பவுண்டேசன் | க.பொ.த (சா/த) செயற்றிட்டம் | 20000.00 |

# பரிசு பெறும் மாணவர் விபரம் – 2017

## தரம் 01(2017)

| தொ. இல | மாணவர் பெயர் | தொ. இல | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | சதீஸ்குமார் ஆரணி | 20 | செல்வனோகரன் சந்தோஸ் |
| 2 | அருள்தாஸ் அனுஸ்ரிகா | 21 | ஜெயானந்தராசா ஜெனுசன் |
| 3 | அருள்தாஸ் அனுசா | 22 | கார்த்திக் ஹரிதரன் |
| 4 | திருக்குமரன் தக்சவி | 23 | தயாபரன் கிரிகரன் |
| 5 | மனோகரதாஸ் பிருந்தா | 24 | தங்கரூபன் அபிசன் |
| 6 | கோணேஸ்வரன் யருசா | 25 | ஆனந்தரூபன் எதீஷன் |
| 7 | சிவானந்தம் சியானி | 26 | உதயகுமார் கோகுலன் |
| 8 | பார்த்தீபன் திவ்வியா | 27 | ஜெயமுரளி சரோன் |
| 9 | சிவராமன் அபிவர்னா | 28 | றவி புவீசன் |
| 10 | பார்த்தீபன் டனுஸ்கா | 29 | வாசுகன் கனிசன் |
| 11 | தமிழகன் தமிழ்நிலா | 30 | பாலேந்திரன் சதுர்சிகன் |
| 12 | உதயகுமார் டிலக்சி | 31 | கண்ணன் மதுஷன் |
| 13 | நாகேஸ்வரன் சர்மி | 32 | கிருஷ்ணநாதன் தனேஷ் |
| 14 | முருகேசன் சர்மிகா | 33 | சுகுந்தராசா டக்சக்ஷிகன் |
| 15 | இராசநாயகம் அபிநயா | 34 | சதீஸ்குமார் ஜானுஜன் |
| 16 | ஆனந்தராஜ் தீபிகா | 35 | இருதயநாதன் கபிஸன் |
| 17 | குகேந்திரன் கிருத்திகா | 36 | விஸ்வலிங்கம் வசந்தன் |
| 18 | சிவரூபன் தரன் | 37 | தண்டாயுதபாணிதேசிகர் தனுஷ்கன் |
| 19 | அன்ரன்விமலதாஸ் அபிசன் | | |

## தரம் 01 (2016)

| | |
|---|---|
| பிறேம்குமார் ஹம்சவி | தமிழ், கணிதம், சைவசமயம் |
| செல்வக்கதிரமலை டுஜிஸ்டன் | சுற்றாடல் |
| ரவிக்குமார் அபிலாஷ் | சுற்றாடல், சமயம் |
| சிவகுமரன் கேஷினி | சுற்றாடல் |
| சிவநாதன் சங்கவி | சைவசமயம் |
| கமலநாதன் சுவிராஜ் | கத்தோலிக்கசமயம் |

## தரம் 02 (2016)

| | |
|---|---|
| பிருந்தா தியாகசீலன் | தமிழ், கணிதம் |
| கிருஷ்ணகுமார் கிஷாந் | சுற்றாடல் |
| பிரதீபன் பகலவன் | சைவசமயம் |
| ஜெயசீலன் ஜதுசன் | கத்தோலிக்க சமயம் |

## தரம் 03 (2016)

| | |
|---|---|
| சிவகுமார் கதிர்ச்செல்வன் | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| சூரியகுமார் மதுசன் | ஆங்கிலம் |
| ஜெயானந்தராசா ஜெஸ்மிகா | ஆங்கிலம் |

| | |
|---|---|
| ராஜசுந்தரன் நிதுஷா | சைவசமயம் |
| ஆனந்தக்கோடி திவ்யா | சைவசமயம் |
| ஆனந்தரூபன் கிருஷாந் | சைவசமயம் |
| யேசுபாலன் புகழரசி | கத்தோலிக்க சமயம் |

**தரம் 04 (2016)**

| | |
|---|---|
| சுரேஸ்குமார் தாரணி | தமிழ், கணிதம், சுற்றாடல்,சைவசமயம், ஆங்கிலம் |
| அன்ரனிவிமலதாஸ் நிதர்சன் | கத்தோலிக்க சமயம் |

**தரம் 05 (2016)**

| | |
|---|---|
| பஞ்சவர்ணம் சாந்தரூபி | தமிழ், கணிதம், சுற்றாடல்,சைவசமயம் |
| கிருஸ்ணகுமார் சேரமதி | ஆங்கிலம் |
| ஸ்ரிவேட்கொலின் ஜெரோன் | கத்தோலிக்க சமயம் |

**தரம் 06 (2016)**

| | |
|---|---|
| ஹரிதாஸ் கிருஷாயினி | தமிழ், கணிதம், சைவசமயம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், சுகாதாரம் வாழ்க்கைத்தேர்ச்சி, நடனம் |
| அருந்தவராசா நிவேதா | சங்கீதம், செயன்முறைத் தொழிநுட்பம் |
| ரவீந்தர் ரம்மியா | கத்தோலிக்க சமயம் |

**தரம் 07 (2016)**

| | |
|---|---|
| முகுந்தன் வைஷ்ணவி | தமிழ், ஆங்கிலம், புவியியல், குடியியல் |
| கோணநாயகம் மோகனசுந்தரி | விஞ்ஞானம், சுகாதாரம், P.T.S |
| கிறேசியன் கிருபாகரன் மேரிசர்மிளா | கத்தோலிக்க சமயம், சங்கீதம் |
| சந்திரகாந்தன் கீர்த்தனா | வாழ்க்கைத்தேர்ச்சி, சித்திரம் |
| சந்திரமோகன் ஜெயந்தினி | சைவசமயம் |
| சிவனேஸ்வரராசா சுபர்ணா | கணிதம் |
| துவாரகன் நிசாந்தி | நடனம் |

**தரம் 08 (2016)**

| | |
|---|---|
| தயாநிதிவேல் தாரணி | தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு |
| கோணேஸ்வரன் விதுஷா | சைவசமயம், ஆங்கிலம், புவியியல், வாழ்க்கைத்தேர்ச்சி, சித்திரம், செயன்முறை |
| சசிக்குமார் திசாந்தினி | கத்தோலிக்க சமயம் |
| அரிச்சந்திரன் கௌசலா | கணிதம், சுகாதாரம் |
| சிவராஜ் வர்சிகா | சங்கீதம் |
| ஹரிதாஸ் ரேணுஜா | நடனம் |

**தரம் 09 (2016)**

| | |
|---|---|
| உதயகுமார் பிரியாங்கினி | சைவசமயம், வரலாறு |
| அன்ரனிவிமலதாஸ் நிருசாந்தி | கத்தோலிக்கசமயம் |
| மனோகரன் விதுசிகா | தமிழ், கணிதம், சுகாதாரம், செயன்முறைத் தொழிநுட்பம் |

| | |
|---|---|
| ஸ்ரீசுந்தர் சௌமியா | ஆங்கிலம் |
| மணிமாறன் மலர்நிலா | விஞ்ஞானம், புவியியல், நடனம், வாழ்க்கைத்தேர்ச்சி |
| ரவி ரஜீவா | சங்கீதம் |

**தரம் 10 (2016)**

| | |
|---|---|
| செந்திவேல் ஆர்த்திகா | சைவசமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, வணிகமும், கணக்கீட்டுக் கல்வியும், ICT |
| அருள்தேவதாஸ் மேரிஆன்திரேசா | கத்தோலிக்கசமயம், கடல்வளம் |
| கிருஷ்ணகுமார் நிகல்யா | புவியியல், நடனம் |
| கேசவன் சாமினி | சங்கீதம் |
| ஜெயக்குமார் பிரியா | சித்திரம் |
| இராஜேஸ்வரன் ஜானகி | தமிழ் இலக்கியநயம் |
| தேய்வேந்திரன் சர்மியா | சுகாதாரம் |

**தரம் 11 (2016)க.பொ.த(சா/த)அதிதிறமைச்சித்தி பெற்றோர்**

| | |
|---|---|
| ஸ்ரீயுவராஜன் ஹம்சா | கத்தோலிக்கசமயம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, வணிகக்கல்வி, தமிழ்இலக்கியநயம், கடல்வளம் |
| ஜெயகணேஸ் தமிழ்ப்பிரியா | சைவசமயம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், வரலாறு,புவியியல், நடனம், ICT |
| குகதாஸ் குகப்பிரியா | சைவசமயம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, வணிகக்கல்வி, சங்கீதம் |
| செல்வச்சந்திரன் நிரந்தரிகா | சைவசமயம், தமிழ், கணிதம், நடனம், வரலாறு |
| உதயகுமார் சசிதரா | சைவசமயம், தமிழ், கணிதம், நடனம், வரலாறு |
| ஆனந்தன் திவாஜினி | சைவசமயம், தமிழ், விஞ்ஞானம், நடனம், வரலாறு |
| புவிநாதன் சிந்துஜா | சைவசமயம், தமிழ், வரலாறு,தமிழ்இலக்கியநயம் |
| ஜெயசீலன் மேரிஜென்சிகா | கத்தோலிக்கசமயம், புவியியல், சங்கீதம், கடல்வளம் |
| இந்திரதாஸ் இந்துஷா | சைவசமயம், தமிழ், கணிதம் |
| மனோகரன் கனிஷா | சைவசமயம், தமிழ், நடனம் |
| அன்ரன்மரியதாஸ் தானிகா | கத்தோலிக்கசமயம், புவியியல், நடனம் |
| உதயகுமார் பிரவீணா | கணிதம், நடனம் |
| சோமசுந்தரம் பவதாரணி | சைவசமயம் |

**க.பொ.த(உ/த) 2018**
**(கலைப்பிரிவு)**

| | | |
|---|---|---|
| சண்முகராசா சாந்தினி | - | தமிழ் |
| ரவிக்குமார் பிருதா | - | சங்கீதம் |
| சிங்கராசா மேரிகௌசிகா | - | கிறிஸ்தவநாகரிகம் |

**க.பொ.த(உ/த) 2017**
**(வர்த்தகப்பிரிவு)**

இராமகிருஷ்ணன் லதா - பொருளியல், கணக்கியல், வணிகக்கல்வி

**க.பொ.த(உ/த) 2017**
**(கலைப்பிரிவு)**

திருகுலசிங்கம் திருவாஜினி - தமிழ், இந்துநாகரிகம்
இரட்ணஜோதி கௌரி - சங்கீதம்

**ஓவியப்போட்டி – 2016**

| | | | |
|---|---|---|---|
| கண்ணன் கஸ்தூரி | தரம் 12 | 3ம் இடம் | சமூகவிஞ்ஞானப் போட்டி 2016 |
| தயாநிதிவேல் தாரணி | வலயமட்டம் | 1ம் இடம் | |

**தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள் 2016**
**வலயமட்டம்**

கேசவன் சாமினி பண்ணிசை 1ம் இடம்

**தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள் 2017**

| | | | |
|---|---|---|---|
| இராசகுமார் தர்சினி | சிறுகதை | வலயமட்டம் | 1ம் இடம், மாகாணமட்டம் 2ம் இடம் |
| உதயகுமார் பிரித்திகா | இசை தனி | வலயமட்டம் | 2ம் இடம் |
| ரவிக்குமார் பிருதா | கவிதை | வலயமட்டம் | 2ம் இடம் |

**சமயப்போட்டி – 2017**
**வலயமட்டம்**

கேசவன் சாமினி திருமுறை மனனம் 3ம் இடம்

**கணிதபுதிர்ப் போட்டி 2017**

ஹரிதாஸ் கிருஷாயினி வலயமட்டம்

**கணித ஒலிம்பியாட் போட்டி 2017**
**வலயமட்டம்தெரிவு**

| | |
|---|---|
| உதயகுமார் பிரதீபா | தரம் 6 |
| தாமரைச்செல்வன் மதி | தரம் 6 |
| கிருஷ்ணகுமார் தாரணி | தரம் 6 |

**மெய்வன்மைப் போட்டிகள்வலயமட்டம்**

வலைப்பந்தாட்டம் 3ம் இடம்
பட்மின்ரன் 2ம் இடம் } 20வயதுப் பிரிவு
வொலிபோல் 3ம் இடம்

1. ரவிக்குமார் பிருதா - பட்மின்ரன், வொலிபோல், வலைப்பந்து
2. சுபாகரன் சுலக்சனா - பட்மின்ரன், வொலிபோல், வலைப்பந்து
3. கண்ணன் கஸ்தூரி - பட்மின்ரன், வொலிபோல்
4. ஆனந்தராசா அனுசியா - பட்மின்ரன்

5. போல்ரோஸ் அலக்சனா — வொலிபோல், வலைப்பந்து
6. உதயகுமார் ராஜினி — வொலிபோல், வலைப்பந்து
7. சந்திரகுமார் பகீரதி — வொலிபோல், வலைப்பந்து
8. மணிமாறன் டிலானி — வொலிபோல், வலைப்பந்து
9. நவரட்ணம் சோபனா — வொலிபோல், வலைப்பந்து
10. சண்முகராசா சாந்தினி — வலைப்பந்து
11. வீரபகீரதன் பாலதுளசி — வொலிபோல்

**பட்மின்ரன் 3ம் இடம் (17வயதுப் பிரிவு)**

1. கிருஸ்ணலிங்கம் நிகல்யா
2. அருள்தேவதாஸ் மேரிஆன்திரேசா
3. கஜேந்திரராசா யாழினி

**மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்**

**வலயமட்டம்**

**12 வயதுப்பிரிவு**

| | | |
|---|---|---|
| குமரன் கோபிகா | 100m | 3ம் இடம் |

**14 வயதுப்பிரிவு**

| | | |
|---|---|---|
| அன்ரன்ராசநாயகம் அபி | 80 m | 2ம் இடம் |

**18 வயதுப்பிரிவு**

| | | |
|---|---|---|
| ஜெயகுமார் பிரியா | 1500 m | 3ம் இடம் |
| சிவசுந்தரம் தர்ஷனா | 400mH | 1ம் இடம் |
| ஜெயகணேஸ் ஜெயசாந்தினி | 400mH | 2ம் இடம் |

**20 வயதுப்பிரிவு**

| | | |
|---|---|---|
| ஆனந்தராசா அனுசியா | 400 m | 1ம் இடம் |
| ரவிக்குமார் பிருதா | 400 m | 2ம் இடம் |
| குருகுலசிங்கம் சிந்துஜா | 400 m | 3ம் இடம் |
| | 800 m | 3ம் இடம் |
| சுபாகரன் சுலக்சனா | 800 m | 2ம் இடம் |
| கண்ணன் கஸ்தூரி | 1500 m | 3ம் இடம் |
| நவரட்ணம் சோபனா | 110mH | 3ம் இடம் |

**20 வயதுப்பிரிவு**

4X100m — 2ம் இடம், 4X400m 2ம் இடம்

1. ரவிக்குமார் பிருதா
2. போல்ரோஸ் அலக்சனா
3. சுபாகரன் சுலக்சனா
4. குருகுலசிங்கம் சிந்துஜா
5. உதயகுமார் ராஜினி

# English day competition

# Group Singing – Junior – 3rd Place

1. Vithusha Koneshwaran
2. Kiruththika Kumaran
3. Renuja Haridas
4. Varshika Sivaraj
5. Kirushaliny Sivakumar
6. Ilanila Selvachchandran
7. Pakeerathy Kumaravel
8. Jathursha Premathas
9. Denuja Vijayakumar
10. Mathushalini Haridas
11. Gayalvili Sutharshan
12. Kavery Thayakaran
13. Kirushalini Haridas
14. Shainthavi Sivaraj
15. Kirushika Uthayakumar
16. Archchana Anantharaj
17. Yalini Sivakumar
18. Marysarmila Kresiyankirupakaran
19. Subarna Sivaneswararasa
20. Jeyavani Jeyaganesh

**பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்படும் விசேட பரிசில்கள்**

**க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றுக்கான பரிசு**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீயுவராஜன் ஹம்சா | 8A, B |
| 2. | ஜெயகணேஷ் தமிழ்ப்பிரியா | 8A, B |

**க.பொ.த(உ/த)ல் சித்தியெய்தி பல்கலைக்கழகத்திற்குத்தெரிவானோர்**

**திருமதி.சா.சுலோசனா ஞாபகார்த்தம்**

1. இராசகுமார் லக்சுமி
2. வின்சன்ராஜசேகர் ஜனுஜா
3. கிறேசியன்அமலராசா மேரியஸ்ரலா

